# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 137/2025** |
| Prosecution witness | : | P.W. 2 |
| List of witness | : | L.W.2 |
| Name | : | அப்பு (எ) இதயகுமார் |
| Father’s /Husband Name | : | குருநாதன் |
| Village | : | செருகளத்தூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 35 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். அ.சா.1 அய்யப்பன் என்பவரை எனக்கு தெரியும். அவர் என்னிடம் தான் வேலை பார்த்த வருகிறார். கடந்த 21.04.2025 ஆம் தேதியன்று எனது பக்கத்து ஊரான ஆவணத்தில் திரௌபதி அம்மன் கோவில் தீமிதி திருவிழாவிற்கு நான் சுமார் இரவு 08.00 மணியளவில் சென்ற போது அய்யப்பன் அவரது வீட்டு வாசலில் அவருடைய வாகனத்தில் அமர்ந்திருந்தார். அப்போது செல்வமணி அய்யப்பனை குச்சிகாரி தேவடியா மவனே என்று திட்டி கையில் வைத்திருந்த கத்தியின் பின்பகுதியால் அய்யப்பனின் தாவாங் கட்டையில் அடித்தார். அருகில் நின்ற நான் அய்யப்பனிடம் சென்று பார்த்த போது அய்யப்பனுடைய மேல் பகுதியில் உள்ள இரண்டு பற்கள் உடைந்திருந்தது. வாயில் இரத்தம் வந்தது. அப்போது செல்வமணி கத்தியை காண்பித்து அய்யப்பனை காலி பண்ணாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார். நான் குடவாசல் அரசு மருத்துவமனைக்கு அய்யப்பனை அழைத்து சென்றேன். அய்யப்பனுடைய அப்பா சுப்பரமணியன் மற்றும் அக்கா கலைசெல்விக்கு தகவல் சொன்னேன். அவர்களும் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். அதன்பிறகு சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அய்யப்பனை அவரது அப்பா அழைத்து சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :- வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறு விசாரணை</u>** :- இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 15:26:25 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.